(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru.
2nd Term Term Examination - 2022

கணக்கீடு Accounting	Three Hours Gr -12 (2023)	33	T	I,II

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.
- மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 – 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி – I

01. நிதிக்கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) அக்கறையுடைய தரப்பினர் தீர்மானமெடுத்தலுக்கு தேவையான பயனுள்ள தகவல்களை வழங்குகின்றது.
(2) இது கணக்கீட்டு நியமங்களுக்கும், சட்டங்களுக்கும் அமைவானது
(3) இது வரலாற்றுத் தகவல்களையும், எதிர்வு கூறப்படும் தகவல்களையும் அடிப்படையாக கொண்டது.
(4) இது நிதியாண்டுக்கு ஒரு தடவை தயாரிக்கப்படும்.
(5) இது கணக்கீட்டின் பிரதான வகைகளில் ஒன்றாகும். ( )

02. கணக்கீட்டின் தொழில்சார் சூழல் காரணியை உள்ளடக்கிய தொகுதி பின்வருவனவற்றுள் எது?
(1) கணக்கீட்டு மென்பொருள், இலத்திரனியல் முறைமை, தகவல் தொழில்நுட்பம்
(2) சனத்தொகை வளர்ச்சி, பணவீக்கம், வட்டிவீதம்
(3) வட்டிவீதம், பணவீக்கம், வரிவதிப்பு
(4) வேலைவாயப்பு, வருமானப்பரம்பல், குடித்தொகை அடர்த்தி
(5) கணக்கீட்டுவாண்மை அமைப்புக்கள், கணக்கீட்டு நியமம், கணக்கீட்டு எண்ணக்கருக்கள் ( )

03. இசைநிலா வணிகத்தின் 01.03.2022 இல் இருந்தபடி மொத்தச் சொத்துக்கள், பொறுப்புக்கள், முறையே ரூ125000, ரூ 50000 ஆகவும் காணப்பட்டன. மார்ச் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

- வங்கிக்கடன் தவணைப்பணக் கொடுப்பனவு ரூ 11200 உரிமையாளர் தனது சொந்த நிதியிலிருந்து செலுத்தியிருந்தார். இக்கொடுப்பனவில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சம வங்கிக் கடன்வட்டி ரூ 1200 உம் உள்ளடங்கும்.
- உரிமையாளர் ரூ 5000 இனை பற்றியிருந்தார்.
- ரூ 20000 கிரயமான இருப்புக்கள் ரூ 35000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது

31.03.2022 இல் தேறிய சொத்துக்களின் பெறுமதியாது?
(1) ரூ 101200 (2) ரூ 95800 (3) ரூ 100800
(4) ரூ 85000 (5) ரூ 96200 ( )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- VAT அறவீட்டுக்காக பதிவு செய்யப்பட்ட அகிலன் வணிகமானது ஆதிவணிகத்திடம் இருந்து (10% VAT உள்ளடங்கலாக) ரூ 44000 விலையில் பண்டங்களை கடனுக்கு கொள்வனவு செய்தது. இதில் (10% VAT உள்ளடங்கலாக) ரூ 2200 பண்டங்களினை ஆதி வணிகத்திற்கு திருப்பி அனுப்பியது. எஞ்சிய பண்டங்களில் 50% மானவற்றை அகிலன் வணிகம் (10% VAT உள்ளடங்கலாக) ரூ 33000 பெறுமதிக்கு ஆதிரா வணிகத்திற்கு விற்பனை செய்ததுடன், ஆதிரா வணிகத்திடம் வரவேண்டிய தொகையில் ரூ 31000 பகுதி காசு பெறப்பட்டதுடன் மிகுதி அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கப்பட்டது. மேற்படி தரவுகளில் இருந்து 4ம், 5ம், 6ம் வினாக்களுக்கு விடை தருக.

04. அகிலன் வணிக ஏட்டில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு முறையில் பதிவதற்கான மூல ஆவணங்களின் வரிசை எது?
(1) கொள்வனவுப்பட்டியல், செலவுத்தாள், விற்பனைப்பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு கைச்சாத்து
(2) கொள்வனவுபட்டியல், வரவுத்தாள், விற்பனைப்பட்டியல், கைச்சாத்து, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
(3) கொள்வனவு பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு கைச்சாத்து, விற்பனைப்பட்டியல்
(4) விற்பனைப்பட்டியல், வரவுத்தாள், கொள்வனவுப்பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
(5) கொள்வனவுப்பட்டியல், வரவுத்தாள், விற்பனைப்பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
( )

05. மேற்படி கொடுக்கல்வாங்கல்களினால் பெறுமதிசேர்வரி (VAT) கணக்கின் இறுதி மீதி யாது?
(1) ரூ 800 செலவு (2) ரூ 800 வரவு (3) ரூ 1000 செலவு
(4) ரூ 1000 வரவு (5) ரூ 900 வரவு ( )

06. மேற்படி கொடுக்கல் வாங்கல்களினால் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?
(1) ரூ 11000 (2) ரூ 9000 (3) ரூ 10100
(4) ரூ 5000 (5) ரூ 12100 ( )

07. நிறுவனமொன்று எல்லா காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்கின்றது. இதன் மாதாந்த வங்கிக்கூற்று 30.06.2022இல் ரூபா 270000 செலவு மீதியைக் காட்டியது இத்தினத்தில் வைப்புச் செய்யப்பட்டதும் ஆனால் வங்கியால் வசூலிக்கப்படாததுமான காசோலைகள் மற்றும் வழங்கப்பட்டதும் ஆனால் வங்கியில் சமர்ப்பிக்கப்படாததுமான காசோலைகள் முறையே ரூ 85000, ரூ45000 ஆகும். 30.06.2022 இல் காசுப்புத்தக மீதி (வரவு)
(1) ரூபா 225000 (2) ரூபா 23000 (3) ரூபா 270000
(4) ரூபா 310000 (5) ரூபா 355000 ( )

- தாரணி வணிகத்தின் கடன்படுநர் பட்டியல் / அட்டவணை மீதி 58000 கட்டுப்பாட்டுக் கணக்குடன் உடன்படவில்லை வேறுபாட்டிற்கான காரணங்கள்.
  - கொடுத்த கழிவு ரூ 3500 காசுப்பெறுவனவு நாளேட்டில் ரூ 3000 எனப்பதியப்பட்டது.
  - கடன்படுநர் மீது விதித்த வட்டி ரூ 4400 கடன்படுநர் பேரேட்டில் ரூ 400 எனவும் விதித்த வட்டிக்கு கணக்கில் ரூ 4000 எனவும் பதியப்பட்டது.
  - எதிர்மாற்றல் ரூ 3000 பொதுப்பேரேட்டில் உள்ள இரு கணக்குகளிலும் வரவுப்பக்கங்களில் பதியப்பட்டது.
  - அறவிடமுடியாக் கடன் ரூ 2400 கடன்படுநர் பேரேட்டில் ரூ 400 எனவும், அறவிடமுடியாக் கடன் கணக்கில் ரூ 2000 எனவும் பதியப்பட்டது.

  மேற்படி தகவல்களில் இருந்து 8ம் 9ம் வினாக்களுக்கு விடை தருக.

08. திருத்தம் செய்யப்பட்ட கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும், திருத்த முன் கடன்படுநர் கட்டுப்பாடுக் கணக்கு மீதியும் முறையே யாது?
(1) ரூ 66500, ரூ 59500 (2) ரூ 61000, ரூ 55500 (3) ரூ 59500 ரூ 58500
(4) ரூ 59500 ரூ 66000 (5) ரூ 59500, ரூ 55500 ( )

09. மேற்படி பிழைகள் தவறுகளால் பரீட்சைமீதியில் காணப்பட்ட தொங்கல் கணக்கு மீதி
(1) செலவு ரூ 6000 (2) வரவு ரூ 6000 (3) வரவு ரூ 64000
(4) செலவு ரூ 5600 (5) வரவு ரூ 5600 ( )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது கிரயம், தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய வற்றில் குறைந்த பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் இருப்புக்களை இனங்காண்பதற்கும் கணக்கீடு செய்வதற்குமான அடிப்படையை வழங்குகின்றது.
(1) முக்கியத்துவம், இணைத்தல் எண்ணக்கருக்கள்
(2) இணைத்தல், காலந்தவறாமை எண்ணக்கருக்கள்
(3) பாதுகாப்பு, தேறல் எண்ணக்கருக்கள்
(4) முன்னெச்சரிக்கை, வரலாற்று கிரய எண்ணக்கருக்கள்
(5) முன்னெச்சரிக்கை, இணைத்தல் எண்ணக்கருக்கள் ( )

- **11ம், 12ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

நிறுவனமொன்று ரூ 100000 காசினை மூலதனமாக ஈடுபடுத்தி 01.01.2022 வணிகம் ஒன்றினை ஆரம்பித்தது. இந் நிறுவனம் பெறுமதி சேர்வரி (VAT) இற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொள்வனவுகளிலும் விற்பனைகளிலும் 8% பெறுமதி சேர்வரி (VAT) உள்ளடங்குகின்றது. 31.01.2022 இல் முடிவடையும் மாத காலத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

- ரூ 540000 இற்கு கடனுக்கு பொருட்கள் கௌ்வனவு செய்யப்பட்டன.
- இப் பொருட்கள் அனைத்தும் ரூ 648000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
- கடன்பட்டோரிடம் இருந்து ரூ 500000 பெறப்பட்டது.
- ரூ 360000 இற்கான கடன் கொடுத்தோருக்கு ரூ 20000 கழிவுடன் காசு கொடுத்து தீர்க்கப்பட்டது.

11. 31-01-2022 முடிவடைந்த மாதத்துக்கான மொத்த இலாபமும் 31-01-2022 இல் உள்ளவாறான காசுக்கணக்கு மீதியும் யாது?

	மொத்த இலாபம் (ரூ000ல்)	காசுக்கணக்கு மீதி (ரூ 000ல்)
(1)	100	160
(2)	100	240
(3)	100	260
(4)	108	160
(5)	108	260

( )

12. 31-01-2022 இல் உள்ளவாறு வணிகத்தின் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை யாது?

	மொத்த பொறுப்புக்கள் (ரூ000ல்)	உரிமையாண்மை (ரூ 000ல்)
(1)	180	120
(2)	180	220
(3)	188	220
(4)	188	128
(5)	200	228

( )

13. ஆதித்தன் வணிகம் இறுதி வருமதியாளர் மீதியில் 5% ஐயக்கடன் ஒதுக்கத்தினை பேணுகின்றது 01-04-2021 இல் ஐயக்கடன் ஒதுக்கக்கணக்கு மீதி ரூ 30000 ஆக காணப்பட்டது. நிதிவருட காலத்தில் இம் மீதியானது ரூ 6000 ஆல் அதிகரித்தால் நிதி வருட முடிவில் வியாபார வருமதியாளர் மீதி யாது?
(1) ரூ 72000 (2) ரூ 720000 (3) ரூ 380000
(4) ரூ 360000 (5) ரூ 300000 ( )

14. ஒரு விநியோக வானின் கிரயம் ரூபா 500000 ஆகவும், அதன் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகவும் இருந்தது. இவ் வாகனத்தின் முதல் ஐந்து வருடங்களுக்கான திரண்ட தேய்மானம் ரூ 225000 ஆகும். இக்கம்பனி தனது வாகனங்களுக்கு நேர் கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடுகிறது. இவ்வாகனத்தின் “பெறுமானத்தேய்வு செய்யக்கூடியதொகை” யாது?
(1) ரூபா 50000 (2) ரூபா 500000 (3) ரூபா 450000
(4) ரூபா 400000 (5) ரூபா 225000 ( )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15. சங்கீதா வணிகம் 31.03.2022 இல் முடிவடைந்த கணக்காண்டில் செலுத்திய வாடகை ரூ 200000 ஆகும். 31.12.2021 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக மாதாந்த வாடகை ரூ 20000 ஆகவும் 31.12.2022 இல் முடிவடைந்த வருடத்திற்காக மாதாந்தம் ரூ 25000 ஆகவும் இருந்தது. 31-03-2022 முடிவடைந்த கணக்காண்டில் இலாபநட்டக் கூற்றிலும், நிதிநிலைமைக் கூற்றிலும் அறிக்கைப்படுத்தப்பட வேண்டிய வாடகைச் செலவீனமும், அட்டுறு வாடகையும்
(1) ரூபா 180000, ரூபா 20000 (2) ரூபா 240000, ரூபா 40000 (3) ரூபா 315000, ரூபா 115000
(4) ரூபா 255000, ரூபா 55000 (5) ரூபா 300000, ரூபா 100000 ( )

- **16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

16. பின்வரும் கூற்றுக்களில் எது சரி, எது பிழை என குறிப்பிடுக.
   A) முகாமைக் கணக்கீடானது நிறுவனத்தின் கடந்தகால மற்றும் எதிர்காலத் தகவல்களை வழங்குகின்றது. ( )
   B) வங்கிக் கடன் ஒன்றுக்கான வட்டிக் கொடுப்பனவினால் வணிகத்தில் உரிமையாண்மை குறைவடைகின்றது. ( )
   C) இலாபநோக்குடன் நடத்தப்படும் ஒவ்வொரு வணிகமும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் வேண்டும். ( )
   D) கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காணுதல் என்பது வணிகமொன்றின் கணக்கீட்டு செய்முறையின் ஆரம்பப்படி ஆகும். ( )

17. நிறுவனமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளினால் கணக்காண்டின் இறுதியில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை ஆகியவைகளின் மீதிகள் அதிகரிக்குமா? குறையுமா? மாற்றமின்மையா? என்பதனைக் குறிப்பிடுக.

கொடுக்கல்வாங்கல்கள்	சொத்துக்கள்	பொறுப்புக்கள்	உரிமையாண்மை
A) வங்கிக்கடன் மூலம் விநியோகவான் வணிக பயன்பாட்டுக்கு வாங்குதல்			
B) செலுத்திய வங்கிக்கடன் தவணைக் கொடுப்பனவு வட்டியுடன் சேர்ந்தாக			
C) வங்கிமேலதிகப்பற்று உள்ள போது வங்கிமேலதிகப்பற்றுக்காக வங்கி அறவிட்ட மேலதிகப்பற்று வட்டி			
D) கடந்த வருடசென்மதி மின்சாரம், நடப்பாண்டுக்கான மின்சாரம் கட்டணம் காசோலை மூலம் செலுத்துதல்			

18. பின்வரும் கணக்குகளை சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவீனம், உரிமையாண்மை என வகைப்படுத்துக.

கணக்கு	வகைப்படுத்தல்
A- ஊழியர்சேமலாபநிதி செலவு	……………………………………..
B- இருப்பு விலை வீழ்ச்சி நட்டம்	……………………………………..
C- முற்பணமாக பெற்றவாடகை வருமானம்	……………………………………..
D- பெறுமதி சேர்வரி (செலவுமீதி)	……………………………………..

19. தளபாடங்களை விற்பனை செய்யும் வணிகம் ஒன்றின் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் ஒவ்வொன்றையும் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பதிவேட்டினைக் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்கள் / நிகழ்வுகள்	மூலப்பதிவேடு
(1) மீள் விற்பனைக்காக கடனுக்கு கொள்வனவு செய்த தளபாடங்கள்	
(2) அலுவலக பயன்பாட்டிற்கு கடனுக்கு வாங்கிய தளபாடங்கள்	
(3) பாடசாலை ஒன்றிற்கு அன்பளிப்புச் செய்த தளபாடங்கள்	
(4) அலுவலக பயன்பாட்டில் இருந்த தளபாடங்களுக்கு செய்யப்பட்ட வருடாந்த பெறுமானத்தேய்வு	

20. பின்வரும் கணக்குகளில் ஏற்படும் தாக்கத்தினையும் பதிவினையும் வெற்றிடத்தில் குறிப்பிடுக.

கணக்குகள்	தாக்கம்	பதிவு
(1) சென்மதி செயற்பாடு செலவு	அதிகரிப்பு	……………………..
(2) வருமதி வருமானங்கள்	……………………..	வரவு
(3) ஐயக்கடன் ஒதுக்கம்	குறைவு	…………………….
(4) வங்கிக்கடன்	……………………..	வரவு

21. கம்பனியொன்றின் காசுக்கட்டுப்பாடு (வங்கிமீதி) 31.03.2022 இல் ரூ 450000 ஆக இருந்தது. இத்தினத்தில் இம் மீதியானது வங்கிக் கூற்று மீதியுடன் ஒத்திருக்கவில்லை. இம் மீதிகளை இணக்கம் செய்யும் போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- வருமதியாளர் ஒருவர் ரூ 80000 காசோலையை நேரடியாக வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.
- நிலையான கட்டளையின் படி வங்கிசெலுத்திய வாடகை ரூ 40000
- வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 60000 காசோலை மறுக்கப்பட்டது.
- இன்னும் வசூலிக்கப்படாத வைப்புக்கள் ரூ 20000
- இன்னமும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்காத காசோலைகள் ரூ 30000

பின்வருவனவற்றை 31.03.2022 இல் உள்ளபடி கணிப்பிடுக.

(அ) சீராக்கிய காசுக் கட்டுப்பாட்டு மீதி ……………………….

(ஆ) வங்கிக் கூற்று மீதி ……………………………………….

22. கம்பனியொன்று தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எந்த கணக்கீட்டு எண்ணக்கருவினை மிகச் சிறப்பாக விபரிக்கிறது என்பதனைக் குறிப்பிடுக.

		கணக்கீட்டு எண்ணக்கரு
(A)	காணியின் நியாயப் பெறுமதி கூடுதலாக இருந்த போதிலும் அதனைப்பெற்றுக் கொண்ட விலையில் அறிக்கையிடல்	
(B)	நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடும் காலத்தினைக் குறிப்பிடுதல்	
(C)	விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கு வழங்கப்படும் உத்தரவாதத்திற்கான ஏற்பாட்டினை செய்தல்	
(D)	நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு ஒவ்வொரு நிதிவருடத்திலும் நேர்கோட்டு முறை தேய்மானத்தினை பயன்படுத்தி பெறுமானத் தேய்வு செய்தல்	

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

23. வணிகமொன்றின் 31.03.2022 இல் உள்ளவாறான பரீட்சை மீதியானது சமப்படாதிருந்ததுடன் அவ்வித்தியாசமானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட பரிசீலனையின் போது பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.

(A) 2022 மார்ச் மாதத்துக்கான விற்பனை நாளேட்டின் மொத்தம் ரூ 540000 ஆனது கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் விற்பனைக் கணக்கிலும் ரூபா 450000 எனப்பதியப்பட்டுள்ளது.

(B) கடன்பட்டோருக்கு கொடுத்த கழிவு ரூ 10000 ஆனது கொடுத்த கழிவுக் கணக்கில் ரூ 1000 ஆக வரவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தொகையானது கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப்பதியப்பட்டுள்ளது.

மேலேதரப்பட்ட வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக. (விளம்பல் அவசியமில்லை)

வழு	விபரம்	வரவு (ரூ)	செலவு (செ)
A	…………………………………………………………… ……………………………………………………………	………… …………	………… …………
B	…………………………………………………………… ……………………………………………………………	………… …………	………… …………

24. 2022 ஜனவரி மாத ஊழியருக்கு செலுத்திய தேறிய சம்பளம் ரூ 36000, ஊழியர் சேமலாபநிதிக்கு (EPF) ஊழியர் 10% மும் தொழில் கொள்வோன் 15% மும் பங்களிப்பு செய்கின்றனர். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில் கொள்வோர் 3% பங்களிப்பு செய்கின்றனர். ஒவ்வொரு மாத பங்களிப்பும் அடுத்தமாதம் செலுத்தப்படுகிறது ஊழியர் தொடர்பான ஜனவரிமாத மொத்தச் செலவு யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

25. குமரன் வணிகத்தில் பயிற்சி பெறும் கணக்குப் பதிவாளர் ஒருவரால் 2022.03.31 ஆந் திகதியில் முடிவடையும் வருடத்துக்காக கணிப்பிடப்பட்ட மொத்த மற்றும் தேறிய இலாபங்கள் முறையே ரூ 120000 மற்றும் ரூபா 80000 ஆகும். பின்னர் மேற்கொண்ட ஆய்வுகளில் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- வாடகை வருமானமாகப் பெற்றது ரூபா 5000 வாடகைச் செலவீனமாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.
- 2022.03.31 இல் இறுதியிருப்பின் கிரயப் பெறுமானம் ரூபா 40000 ஆக காணப்பட்டது. ஆனால் அதன் தேறிய தேறத்தக்க பெறுமானம் ரூபா 36000 என நிதிக் கூற்றுக்களில் அறிக்கை இடப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது : 2022.03.31 திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான

அ) திருத்திய மொத்த இலாபம் …………………………….

ஆ) திருத்திய தேறிய இலாபம் ……………………………

(25 x 4 = 100 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

பகுதி II

அறிவுறுத்தல்கள்:

- ❖ **முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- ❖ **ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.**
- ❖ **உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.**
- ❖ **இவ்வினாத்தாளுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

01) காயத்திரி வணிகத்தின் 2021-12-31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

(ரூ 000ல்)

விபரம்	வரவு	செலவு
காசும் காசுக்கு சமமானவையும்	150	
31-12-2021 இல் தொக்குகள்	450	
விற்பனை அணியினருக்கான ஊக்கத் தொகை	300	
காப்புறுதிக் கட்டணம்	700	
வியாபார சென்மதிகள்		400
மூலதனம்		8700
வங்கிக் கடன் வட்டி	100	
20% வங்கிக்கடன் (நீண்டகாலம்)		1000
மின்சாரக் கட்டணங்கள்	650	
மோட்டார் வான் பழுதுபார்த்தல்	650	
ஏனைய செலவீனங்கள்	1220	
2021.01.01. ஆதனம் பொறி திரண்ட தேய்மானம்		3025
2021.01.01 ஆதனம் பொறி உபகரணம் (கிரயம்)	12700	
வியாபார வருமதியாளர்கள்	800	
ஏனைய நிருவாகச் செலவீனங்கள்	900	
2021.01.01 ஐயுறவுக்கடன் ஒதுக்கம்		100
அலுவலக வாடகை	305	
தொலைபேசிக்கட்டணம்	270	
விற்பனைகள்		15970
விற்பனைக்கிரயம்	10000	
	29195	29195

மேலதிக தகவல்கள்

1. ஆதனம் பொறி மற்றும் உபகரணம், திரண்ட தேய்மானம் பகுப்பு வருமாறு

சொத்து வகை	கிரயம்(000ல்)	திரண்ட தேய்வு (000ல்)
மோட்டார் வான்	2000	600
அலுவலக உபகரணம்	1000	625
காணியும் கடடிடங்கள் (காணி கிரயம் ரூ 5000)	9700	1800
	12700	3025

2. சரக்கிருப்பு பதிவேடுகளின் படி 31.12.2021 இல் சரக்கிருப்பின் கிரயப்பெறுமானம் ரூ450000 ஆகும். எனினும் உரிமையாளர் காயத்திரியினால் சொந்தத் தேவைக்கு எடுத்த ரூ 30000 கிரயமுள்ள பண்டங்கள் பற்றி ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

3. 31.12.2021 வரை செலுத்தப்படாதுள்ள தொலைபேசி கட்டணம் ரூபா *30000* ஆகும்.

4. ஆதனம் பொறி மற்றும் உபகரணம் என்பவற்றுக்கு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்வது வழக்கமாகும். இவற்றின் பயன்பதகு ஆயுட் காலமும், எஞ்சிய பெறுமதியும் வருமாறு

சொத்துக்கள்	பயன்தரு ஆயுட்காலம்	எஞ்சியபெறுமதி
மோட்டார் வான்	*20* வருடங்கள்	-
அலுவலக உபகரணம்	*10* வருடங்கள்	-
கட்டிடம்	*18* வருடங்கள்	200000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

5. ஏனைய செலவீனங்கள் என்பவை பின்வரும் செலவீனங்களையும் உள்ளடக்கும்
   தீயழிவு நட்டம் 220000
   வங்கிக் கட்டணம் 100000
   ஊழியர் சம்பளம் 400000
6. 2021.07.01 இல் புதிய அலுவலக உபகரணம் கொள்வனவு செய்வதற்காக ரூ 500000 செலவிடப்பட்டது. இத்தொகையானது தவறுதலாக ஏனைய நிர்வாக செலவீனத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ளது. இவ் உபகரணத்தின் பயன்படு ஆயுட்காலம் 5 வருடங்கள் என மதிப்பிடப்பட்டதுடன் எஞ்சிய பெறுமானம் எதுவும் இல்லை.
7. ரூ 100000 ஐ அறவிடமுடியாக் கடனாக பதிவளிப்பதுடன் 2021.12.31 இல் காணப்பட வேண்டிய ஐயுறவுக்கடன் ஒதுக்க மீதியானது இறுதி வியாபார வருமதியாளர் தொகையில் 10% ஆக இருத்தல் வேண்டும்.
8. 2021-12-31 இல் உள்ளவாறான வணிகத்தின் காசுக் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும், அம்மாத வங்கிக் கூற்றுமீதியும் பின்வரும் காரணங்களால் வேறுபட்டிருந்தது தெரிய வந்தது.
   அ) வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்த ரூபா 50000 ஏடுகளில் பதியப்படவில்லை.
   ஆ) காயத்திரியின் சொந்த ஆயுள் காப்புறுதிக்கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 20000 வணிகத்தில் ஏடுகளில் பதிவிடப்பட்டவில்லை
   இ) வங்கிக் கூற்றில் காணப்படும் வங்கிமேலதிகப் பற்று வட்டி ரூபா 15000 31.12.2021 வரை கணக்கு ஏடுகளில் தாக்கல் செய்யப்படவில்லை

   வேண்டப்படுவது
   (1) 2021-12-31 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபநட்டக்கூற்று
   (2) 2021-12-31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

(40 புள்ளிகள்)

02) சாணக்கியன் என்பவர் தளபாடங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றினை 2022.02.01 இல் ஆரம்பித்தார். இதன்போது அவர் தனது சேமிப்பில் இருந்து ரூ 300000 காசினையும், ரூ 300000 பெறுமதியான சொந்த தளபாடங்களையும் மூலதனமாக ஈடுபடுத்தினார், 2022-03-31 வரையான இரு மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

1. ரூபா 160000 கிரயம் கொண்ட தளபாடங்கள் மீள் விற்பனைகருதி காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
2. ரூபா 100000 கிரயம் கொண்ட தளபாடங்கள் மீள் விற்பனை நோக்கமாக சுமந்திரனிடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
3. ரூ 80000 கிரயமான தளபாடங்கள் விற்பனை விலையில் 20% இலாபம் வைத்து உடன் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது
4. ரூ 125000 விற்பனை பெறுமானமுடைய தளபாடங்கள் கிரயத்துடன் 25% இலாபம் வைத்து கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
5. கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட ரூபா 50000 கிரயமுடைய தளபாடங்களுக்கு ரூ 7500 கழிவு நீக்கி காசோலை பெறப்பட்டது.
6. செயற்பாட்டுச் செலவுகளுக்கு ரூபா 120000 செலுத்தப்பட்டது.
7. சுமந்திரனின் 50% மான கடனைத் தீர்ப்பதற்காக ரூபா 45000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.
8. தளபாடங்களை விநியோகம் செய்வதற்கு 5 வருட தவணை அடிப்படையில் ரூ 500 000 இற்கு 31.03.2022 இல் மோட்டார் வான் வாங்கப்பட்டது.
9. சாணக்கியன் தனது தனிப்பட்ட தேவைகருதி ரூபா 20000 கிரயமான தளபாடங்களை வணிகத்தில் இருந்து பற்றியிருந்தார்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10. வணிகத்தினை விரிவு படுத்தும் நோக்கில் ரூபா 200000 இனை மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தினார்.

மேலதிகதகவல்கள்

- சாணக்கியனால் மூலதனமாக ஈடுபடுத்திய தளபாடங்கள் வணிகத்தின் அலுவலக தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது.

வேண்டப்படுவது

(1) இலக்கம் 1 தொடக்கம் 10 வரையான கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டினை பயன்படுத்தி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பெறுமதியுடன் அதிகரிப்பின் (+) எனவும், குறைவாயின் (-) எனவும் அதன் எதிரே குறிப்பிடுக. (அதற்காக பின்வரும் மாதிரியை பயன்படுத்துக)

இல	சொத்துக்கள்		பொறுப்புக்கள்		உரிமையாண்மை
	நடைமுறை அல்லாத சொத்துக்கள்	நடைமுறைச் சொத்துக்கள்	நடைமுறைஅல்லாத பொறுப்புக்கள்	நடைமுறைப் பொறுப்புக்கள்	

(2) தேறிய சொத்து அணுகுமுறையை அடிப்படையைப் பயன்படுத்தி காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டத்தினை கணிப்பிடுக. (20 புள்ளிகள்)

03) துசாணி வணிகத்தின் 2021-12-31 இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டிய காசு கட்டுப்பாட்டு மீதி ரூ18000 சொத்தாகும். டிசெம்பர் 31 இல் வங்கிக் கூற்று மீதியும், காசுக் கட்டுப்பாட்டு மீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள் பின்வருமாறு

வங்கிக்கூற்றில் செலவு வைக்கப்படாத காசோலைகள்
இல 53047 ரூ 20000
இல 10183 ரூ 15000

வங்கிக்கூற்றில் வரவு வைக்கப்படாத காசோலைகள்
இல 20048 ரூ 12000
இல 20050 ரூ 26000

மேலதிக தகவல்கள்
2022 ஜனவரி மாதம் காசுப்பெறுவனவு நாட்குறிப்பேட்டில் பகுப்பாய்வு நிரல்களில் காட்டிய காசோலை பெறுவனவு பின்வருமாறு

காசோலை இல	பெறுமதி (ரூபா)
53080	50000
10250	75000
30011	33000
10868	40000

2022 ஜனவரி மாதம் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் காணப்பட்ட காசோலைக் கொடுப்பனவுகள் வருமாறு

காசோலை இல	பெறுமதி (ரூபா)
20051	17000
20052	12000
20053	6500
20054	38000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- *2022 ஜனவரி மாதம் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட காசோலை இலக்கங்கள் முறையே 20048, 20050, 20052*
- 2022 ஜனவரி மாதம் வங்கியில் வசூலிக்கப்படாது காணப்பட்ட காசோலை இலக்கங்கள் முறையே 53080, 30011
- *2022 ஜனவரி மாதம் வங்கிக் கூற்றில் காணப்பட்ட பின்வரும் உருப்படிகள் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.*

  நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா *18000*

  நேரடி வைப்பு (வாடிக்கையாளர்) ரூபா *20000*

  வங்கிக் கட்டணம் ரூபா *3000*

  நிலையான கட்டளை காப்புறுதிக்கட்டணம் ரூபா *11000*

வேண்டப்படுவது

(1) 2022 ஜனவரி மாதம் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று (திகதி அவசியம் இல்லை)

(2) 2022 ஜனவரி 31 இல் திருத்திய காசு கட்டுப்பாட்டு கணக்கு

(3) 2022 ஜனவரி மாத வங்கி இணக்கக்கூற்று

(20 புள்ளிகள்)

04) மடு அன்னை வணிகத்தின் வியாபாரக் கடன்பட்டோருடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

கடன்படுநர் பெயர்	01-07-2022 இல் உள்ள மீதிகள்	விற்பனை நாளேடு	உட்திரும்பல் நாளேடு	கொடுத்த கழிவு	காசுப் பெறுவனவு
மாயவன்	40000	900000	50000	10000	500000
காவலன்	54000	1100000	120000	25000	800000
பாவலன்	55000	850000	60000	-	650000
சங்கரன்	35000	950000	80000	-	700000

வேண்டப்படுவது

1. *2022 ஜனவரி 31 இல் தயாரிக்கப்பட்ட சீராக்கமுன் கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிக்குக.*
2. மேற்படி தயாரிக்கப்பட்ட கடன்படுநர் கட்டுபபாட்டுக்கணக்கு மீதியுடன், கடன்படுநர்பேரேட்டுக் கணக்கு மீதிகளின் பட்டியல் கூட்டுத்தொகையுடன் இணங்கவில்லை, பரிசீலனையின் போது பின்வரும் வழுக்கள் இனங்கண்டு கொள்ளப்பட்டன.

   (1) காவலனுக்கு அனுமதித்த கழிவு காவலன் கணக்கின் வரவுப் பக்கத்தில் ரூ *2500* என தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

   (2) பாவலனின் வருமதியான தொகை மீதி விதிப்பனவு செய்யப்பட்ட காலங்கடந்த கடன்வட்டி ரூ *5000* பாவலன் கணக்கில் சரியாக தாக்கல் செய்த போதிலும் பொதுப்பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை.

   (3) சங்கரன் கணக்கின் ஆரம்ப மீதி அவரது கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

   (4) உட்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ *340000* ஆக பொதுப் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

அ) பொதுப்பேரேட்டுக் கணக்குகளில் வழுக்களைச் சீராக்குவதற்கான நாட்குறிப்பு பதிவு (பதிவு இல்லையாயின் காரணம் தருக)

ஆ) சீராக்கிய கடன்படுநர் கட்டுப்பாட்டுக்கணக்கு

இ) சீராக்கிய கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கினை கடன்படுநர் மீதிகளுடன் இணக்கம் செய்யும் கூற்று.

(20 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05) இந்திரன் வணிகத்தின் 31-03-2022 இல் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	தொகை		
	கிரயம்	திரண்டதேய்வு	முன்கொண்டு செல் மீதி
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
கட்டிடம்	35000	(15000)	20000
அலுவலக உபகரணங்கள்	15000	(2000)	13000
	50000	(17000)	33000
நடைமுறைச் சொத்துக்கள்			
இறுதிச்சரக்கிருப்பு		25000	
வியாபார வருமதியாளர்		15000	
காசும் காசுக்கு சமமானவை		26000	
தொங்கல்கணக்கு		4100	70100
			103100
உரிமையாண்மை			
மூலதனம்		75000	
தேறிய இலாபம்		15100	90100
நடைமுறைப் பொறுப்ப			
வியாபார சென்மதியாளர்			13000
			103100

கணக்குகளை ஆய்வு செய்த போது கீழ்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.

1. 31.03.2022 இல் உபகரணக் கொள்வனவு ரூ 5000 கொள்வனவுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டு இருந்தது.
2. காசுப்பெறுவனவு நாளேடு கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூ 2500 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாக பதிந்த போதிலும் உரியகழிவுக் கணக்கில் ரூ 250 என பதிவு செய்யப்பட்டது.
3. செலுத்தப்பட்ட வாடகை ரூ 1500 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாக பதிவு செய்த போதிலும் வாடகைக் கணக்கில் செலவில் ரூ 150 எனபதிவு செய்யப்பட்டு இருந்தது.
4. வாடிக்கையாளர் ஒருவரால் திருப்பி அனுப்பிய சரக்கு ரூ 200 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்தபோதிலும் உட்திரும்பல் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது.

(1) வழுக்களை திருத்துவதற்கான பொது நாட்குறிப்பு பதிவு

(2) தொங்கல் கணக்கு

(3) இலாபத்தினை சீராக்குவதற்கான சீராக்கல் கூற்று.

(20 புள்ளிகள்)